සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

දෙවන වාර ඇගයීම - 2018
இரண்டாந் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation - 2018

| ශ්‍රේණිය / தரம் / Grade | 07 | විෂයය / பாடம் / Subject | தமிழ்மொழியும் இலக்கியமும் | පත්‍රය / வினாத்தாள் / Paper | I,II | පැය / மணித்தியாலம் / Hours | 02 |
|---|---|---|---|---|---|---|---|

නම
பெயர்
Name

## பகுதி 1

**மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. நாம் வையகம் போற்ற வாழ வேண்டும் - இங்கு வையகம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
   1) காடு 2) பூமி 3) நாடு 4) கடல்

2. எமது இலங்கைத் திருநாடு எழில் மிக்கது – எழில் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
   1) அழகு 2) அமைதி 3) பொழில் 4) செல்வம்

3. சூரியன் உதயமாவதற்கு முன்னர் நித்திரை விட்டெழுதல் ஆரோக்கியத்தைத் தரும் - உதயம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   1) தோற்றம் 2)உற்பத்தி 3) அஸ்தமனம் 4)இரவு

4. கணவனோடு இணைந்து குடும்பத்தை நிர்வகிப்பது ஒவ்வொரு பெண்ணினதும் கடமை ஆகும் - கணவன் என்பதன் எதிர்ப்பாற் சொல்
   1) கணவள் 2)மனைவி 3)அழகி 4)கன்னி

5. புலம், கழனி, பழனம் என்பதைக் குறிக்கும் ஒரு சொல்
   1) காடு 2) மலை 3) தோட்டம் 4) வயல்

6. நாம்பனுக்கு நாகு என்பது போல கலைக்கு
   1) பிணை 2) பிடி 3) பசு 4) பேடு

7. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கை
   1) 247 2) 90 3) 216 4) 246

8. பின்வருவனவற்றுள் மெல்லின எழுத்துகளை மட்டும் கொண்ட தொகுதி
   1) க், ங், ண் 2) ஞ், ந், ம் 3) ய், ர், ம் 4) ப், ச், ந்

9. நேற்றைய தினம் புதிய மாணவர்கள் வருகை தந்தனர் - இங்கு இடம்பெறும் எழுவாய் அடைமொழி
   1) தினம் 2) நேற்றைய 3) மாணவர்கள் 4) புதிய

10. வருவார்கள் என்ற சொல்லின் திணை, பால் முறையே
    1) உயர்திணை, பலர்பால் 2) உயர்திணை, ஆண்பால்
    3) அ∴றிணை, பலர்பால் 4) அ∴றிணை, ஒன்றன்பால்



kalvi.lk

11. பின்வருவனவற்றுள் இரு பொருள் தரும் சிலேடையாக அமைவது
1) இயற்கை 3)பெருமை 3) தாவரம் 4)விவசாயம்

12. ஒருபோதும் மாணவர்கள் தப்பித்தவறியும் பொய் சொல்லக் கூடாது – தப்பித்தவறி என்பது
1) இணைமொழி 2) இரட்டைமொழி
3) அடுக்கிடுக்குமொழி 4) அடுக்குமொழி

13. பழுத்த பழங்களை நாடிச்செல்லும் பறவைகளைப் போல பல புலவர்கள் மன்னனை நாடி வந்தனர் - இவ்வாக்கியத்தின் எழுவாய்
1) பறவைகள் 2) மன்னன் 3) பழங்கள் 4) புலவர்கள்

14. சுழற்காற்றில் அகப்பட்ட துரும்பு போல எனும் உவமைத் தொடர் உணர்த்தும் பொருள்
1) பயனின்மை 2) துன்பப்போராட்டம் 3) ஏமாற்றம் 4) இடம்மாறுதல்

15. பின்வருவனவற்றுள் பலவின்பால் சொல்
1) அது 2) அவர்கள் 3) அவை 4) மாணவர்

16. பரவை, பறவை எனும் சொற்கள் முறையே தரும் பொருள்
1) பட்சி, கடல் 2)கடல், பட்சி
3) பருந்து, பறத்தல் 4)வன்மை, பட்சி

17. வேதம், ஒளித்தல், கறை என்ற பல பொருள் தரும் ஒரு சொல்
1) மதம் 2) சமயம் 3) மறை 4) மரியாதை

18. ஆசிரியர் மாணவருக்கு அறிவுரை வழங்கினார் - இவ்வாக்கியத்தின் செயப்படுபொருள்
1) மாணவர் 2) வழங்கினார் 3) ஆசிரியர் 4)அறிவுரை

19. ஆர்வத்தோடு கேட்டல் என்ற பொருளைத்தரும் மரபுத்தொடர்
1) செவிமடுத்தல் 2) காது குத்துதல்
3) கண்சாத்துதல் 4) காதைக்கடித்தல்

20. சிறுவயதில் கற்கும் கல்வியானது மனதில் என்றும் பதிந்திருக்கும் என்பதற்குப் பொருத்தமான பழமொழி
1) ஆற்றில் போட்டாலும் அளந்து போடு
2) இளமையில் கல்வி சிலையில் எழுத்து
3) இளம் கன்று பயம் அறியாது
4) முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

**(2×20 = 40 புள்ளிகள்)**

Education கல்வி



kalvi.lk

## பகுதி 2

**முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1) தமிழ்மொழிப் பாடவேளையில் உமது வகுப்பறையில் இரண்டாம் தவணைக்காக மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டை அடிப்படையாக வைத்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

   1. நீங்கள் செய்த கணிப்பீட்டின் தலைப்பு யாது?
   2. அச்செயற்பாட்டின் போது ஆசிரியர் வழங்கிய அறிவுரைகள் மூன்றினை எழுதுக.
   3. குழுச் செயற்பாடு ஒன்றைச் செய்வதாயின் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூன்றினை எழுதுக.
   4. அப்பிரச்சினையை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம்?
   5. உங்களுக்கு வழங்கப்பட்ட கணிப்பீட்டின் மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(2+3+3+4+4)

2) பின்வரும் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக.

   1. நான் விரும்பும் பெரியார்
   2. பென்சில் ஒன்றின் சுயசரிதை
   3. சுற்றாடலைப் பேணுவோம்
   4. நான் ஆசிரியரானால்……. (14 புள்ளிகள்)

Education கல்வி

3) பாடநூலை ஆதாரமாகக் கொண்டு விடை தருக.

   1. முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்படுவர் யார்?
   2. ‘‘கண்ணுக்கெட்டிய தூரம்வரை மலையடுக்குகள் நீலநிறப்போர்வை ஒன்றால் போர்த்தியது போல் தோன்றியது’’ இக்கூற்றில் இடம்பெற்றுள்ள அணி எது?
   3. பென்சில் தயாரிப்பதற்கு பயன்படும் மரம் எது?
   4. புத்தியில்லாதவன்’’ என்ற சிலேடையை இருவேறு பொருள் தரக்கூடிய வகையில் எழுதுக.
   5. ஆறு என்ற கவிதையில் ஆறு எங்கே இறங்கித் தவழ்ந்து வருவதாகக் கூறுகின்றது?

4) வாக்கியங்களில் தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

   1. அறிவுப்போராட்டம் / காந்தியின் / அழைக்கப்பட்டது / என்று / மகாத்மா / சத்தியாக்கிரகம்
   2. பொருளைப் / பொருத்தமானவகையில் / சொற்களின் / அறிந்து / பிரயோகிக்கவேண்டும்
   3. ஒரு / டொல்பின்கள் / மட்டும் / கண்ணை / தூங்கும் / மூடிக்கொண்டு
   4. பிள்ளையை / ஊரார் / வளர்த்தால் / தன்பிள்ளை / வளரும் / தானே / ஊட்டி
   5. வழியே / இக்காலமக்கள் / அமைத்துக் / மனம்போன / வாழ்க்கையை / தமது / கொள்கின்றனர்



kalvi.lk

5) பின்வரும் சொற்றொடர்களைப் பயன்படுத்தி கருத்துள்ள வாக்கியங்கள் அமைக்குக.

1. ஆற அமர
2. எலும்பும் தோலும்
3. பென்னம் பெரிய
4. சல சல
5. உயிரும் உடம்பும் போல

6) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

மீனினம் ஓடிப் பரக்குதம்மா – ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா
வானும் கடலாக மாறுதம்மா! - இந்த
மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா! – அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா!
இம்ப ருலகின் இயல்பிதம்மா! – மதிக்கு
இன்னார் இனியாரும் உண்டோ? - அம்மா!

1. இங்கு கூறப்பட்ட காட்சி எது?
2. மீனினம் என்று குறிப்பிடப்படுவது யாது?
3. தாமரை வாடுவதற்கு காரணம் என்ன?
4. இன்னார் என்பதன் எதிர்ப்பதத்தை எழுதுக?
5. இப்பாடலில் உம்மை கவர்ந்த பகுதி எது? காரணம் தருக.

7) மரங்களைப் பாதுகாப்போம் என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்று எழுதுக.

**அல்லது**

புதிய புத்தகப்பை ஒன்றுக்கான விளம்பரம் எழுதுக.


kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457